Thiruvallur 12206.

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

* பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி பொதுத்தமிழ் மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

குறிப்பு:- i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:-
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக:-

பலவுள் தெரிக: 14×1=14

1) கவிதையின் இயங்காற்றல் என்பது
அ) பொருள் ஆ) சொல் இ) நடை ஈ) ஒலி

2) மனித சமூகத்தின் அடிப்படை அலகு
அ) மனைவி ஆ) கணவன் இ) திருமணம் ஈ) குடும்பம்

3) அருங்காணம் - புணர்ச்சி விதி தருக.
அ) ஈறுபோதல் தன் ஒற்று இரட்டல் ஆ) ஈறுபோதல்
இ) ஈறுபோதல் இனமிகல் ஈ) ஈறுபோதல் முன்னின்ற மெய்திரிதல்

4) கிறித்துவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர்
அ) எச்.ஏ.கிருட்டிணனார் ஆ) ஜி.யு.போப்
இ) க. கிருஷ்ணமூர்த்தி ஈ) தேம்பாவணி

5) வெண்பாவிற்குரிய ஓசை
அ) செப்பலோசை ஆ) அகவலோசை இ) துள்ளலோசை ஈ) தூங்கலோசை

6) மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்ட பகுதிகள்
அ) வடசென்னைப் பகுதிகள் ஆ) தென் சென்னைப் பகுதிகள்
இ) மத்திய சென்னைப் பகுதிகள் ஈ) இவை மூன்றும்

7) குறியீடுகளைப் பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| அ) | பென் | - | 1. சமாதானம் |
| ஆ) | புறா | - | 2. வீரம் |
| இ) | தராசு | - | 3. விளக்கு |
| ஈ) | சிங்கம் | - | 4. நீதி |

அ) 2413 ஆ) 2431 இ) 3142 ஈ) 3124

8) 'நன்மொழி' என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) பண்புத்தொகை ஆ) அடுக்குத்தொடர் இ) வினையெச்சம் ஈ) உருவகம்

9) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) நெடுநல்வாடை ஈ) நற்றிணை

10) பிழையற்ற தொடரைக் கண்டறிக
அ) சென்னையிலிருந்து நேற்று வந்தான்
ஆ) கோவலன் மதுரைக்கு சென்றது
இ) பறவைகள் நெல்மணிகளை வேகமாகக் கொத்தித் தின்றது
ஈ) குதிரையும் யானையும் வேகமாக ஓடியது

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



11) முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1: கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2: பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1,2 சரி
இ) கூற்று 1,2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

12) திண்ணியர் என்பதன் பொருள்
அ) அறிவுடையவர் ஆ) மன உறுதியுடையவர் இ) தீக்காய்வார் ஈ) அறிவினார்

13) சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க
அ) வசம்பு ஆ) மணத்தக்காளியிலைச் சாறு
இ) கடுக்காய் ஈ) மாவிலைக்கரி

14) சடாயு உயிர்நீத்த படலம்
அ) அயோத்தியா காண்டம் ஆ) சுந்தர காண்டம்
இ) ஆரணிய காண்டம் ஈ) கிட்கிந்தா காண்டம்

## பகுதி II

### பிரிவு - 1

குறிப்பு: எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6

15) எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும் - யார்க்கு?
16) அக்காலத்துக் கல்விமுறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
17) எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?
18) நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக

### பிரிவு - 2

குறிப்பு: எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:- 2×2=4

19) சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?
20) மனத்தை அதன்போக்கில் செல்லவிடக்கூடாது என்று வள்ளுவம் கூறுவது ஏன்?
21) இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

### பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் ஏழனுக்கு விடை தருக:- 7×2=14

22) உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) கிணற்றுத் தவளைபோல ஆ) எலியும் பூனையும் போல
23) பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக
அ) இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு. நீயும் புரிஞ்சுக்கோ
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்கு போவ சொல்
24) ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) பூம்பாவாய் ஆ) வெங்கதிர்
25) இலக்கணக் குறிப்பு தருக.
அ) உயர்ந்தோர் ஆ) வயங்குமொழி
26) ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக
அ) விளங்கு ஆ) பேசுவார்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



27) பொருள் வேறுபாடறிந்து தொடர் அமைக்க

அ) களம், கலம் ஆ) ஊண் - ஊன்

28) கலைச்சொல்லுக்கேற்ற தமிழ்ச்சொல் எழுதுக.

அ) Internet Banking ஆ) Tips

29) திருவளர்ச்செல்வன், திருவளர்செல்வன் - இவற்றின் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

30) தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

அ) ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.

ஆ) நான் சுடு தண்ணீரில் குளித்தேன்

## பகுதி III

### பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×4=8

31) ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும் - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32) அதியமலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாய் தமிழ்நதி கூறுகிறார்.

33) எவற்றையெல்லாம் விட நன்றி உயர்ந்தது - குறள் வழி விளக்குக

34) மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களை கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்து கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2×4=8

35) மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

36) சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க பண்பாகும் - விளக்குக

37) மயிலை சீனி வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழ்க்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

38) கடையெழு வள்ளல்களையும், அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக

### பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3×4=12

செவிமாற்றுத்திறனாளிக்கு மட்டும் வினா எண். 43க்குப் பதிலாக மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது.

39) பொருள் வேற்றுமை அணி (அல்லது) நிரல்நிறை அணியை விளக்குக

40) கீழ்க்கண்ட பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களைப் பாராட்டுக

முச்சங்கங் கூட்டி
முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத்துள்ளே
அளப்பரிய பொருள் கூட்டி
சொற்சங்கமாகச்
சுவைமிகுந்த கவி கூட்டி
அற்புதங்களெல்லாம்
அமைத்த பெருமாட்டி - கண்ணதாசன்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41) பாடாண் திணையைச் சான்றுடன் விவரி?

42) பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்தெழுதுக
தினை விதைத்தவன் தினை அறுப்பான்
வினை விதைத்தவன் வினை அறுப்பான் - பழமொழியை விளக்கி எழுதுக.

(அல்லது)

நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

43) தமிழாக்கம் தருக.

அ) Walls have ears

ஆ) Many thanks for your kind message of greetings

இ) If you want people to understand you speak their language

ஈ) Little brooks make great river.

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினா

ஆ) பத்தியைப் படித்து புரிந்து வினாக்களுக்கு விடையளி:

நகரங்கள் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும் சமூகத்தின் கடந்தகால வளர்ச்சிக்கும், நிகழ்கால வாழ்விற்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என்றழைக்கப்படும் சென்னை தமிழகமெங்கும் பரவிய ஒன்றாகும். தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும் வளர்ச்சியும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஒன்று.

வினாக்கள்:

அ) பண்பாட்டுக்கூறுகளுள் முதன்மையானது எது?

ஆ) தென்னிந்தியாவின் நுழைவுவாயில் என அழைக்கப்படுவது எது?

இ) நகரங்கள் சமூகத்தில் எவ்வாறு துணை நிற்கின்றன?

ஈ) நாம் அறிய வேண்டிய சிறப்புகள் யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3×6=18**

44) அ) நெடுநல்வாடையில் நக்கீரன் காட்டும் மழைக்கால வர்ணனையை விவரி?

(அல்லது)

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால் கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க

45) அ) 'கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன' இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

(அல்லது)

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

46) அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குக் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.

(அல்லது)

ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் 'கிறித்தவக் கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

## பகுதி - V

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக:** **4+2=6**

47) அ) "பாதகர் குழுமிச்" எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகம் பாடலை எழுதுக.

ஆ) 'உடைத்து' என முடியும் குறளை எழுதுக.

*********

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com